ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நிலைபெறத்தக்க நிதிக் கருத்திட்ட அலுவலர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

## 1.0 பணிப் பொறுப்புக்கள்:

- நிலைபெறத்தக்க நிதி தொடர்புபட்ட முயற்சிகள் பற்றி தேவையின் அடிப்படையில் கணக்கெடுப்புக்களை, ஆய்வுகளை மேற்கொள்ளுதல், அறிக்கைகள், கலந்துரையாடல், குறிப்புக்கள் அத்துடன் ஏதேனும் வேறு கருத்திட்டங்களை தயாரித்தல்.
- உள்ளக மற்றும் வெளிவாரி பங்குதாரர்களுடனான தொடர்புகளில் உதவுதல்.
- நிலைபெறத்தக்க நிதி மீதான வழிநடாத்தல் குழு, பங்குதாரர் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு தொடர்பில் செயலகத் தொழிற்பாடுகள்.
- பிரிவின் நடவடிக்கைகள் பற்றிய கோவைகளை பேணுதல் மற்றும் பதிவுகளை இற்றைப்படுத்தல்.
- நடவடிக்கைமுறைகளைப் பதிவுசெய்வதற்கு பிரிவின்/ திணைக்களத்தின் அலுவலர்களுடனான உள்ளகரீதியாக மற்றும் வெளிவாரியாக இடம்பெறும் கூட்டங்களில் பங்கேற்றல் மற்றும் நிலைபெறத்தக்க நிதி தொடர்பான முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பதில் உதவுதல்.
- துறையில் அபிவிருத்திகளைக் கண்காணிப்பதில் உதவுதல்.
- நிலைபெறத்தக்க நிதிப் பணி தொடர்பில் காலமுறையான மீளாய்வுகளுக்கு ஆதரவளித்தல்.

## 2.0 வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வித் தகைமைகளும் அனுபவமும்:

### 2.1 கல்வித் தகைமைகள்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட **நிலைபெறத்தக்க நிதி அத்துடன்/ அல்லது சுற்றாடல் கற்கைகளுடன் தொடர்புடைய பாடத்தொகுதிகள்/ கற்கைநெறிகள் உடன்** பொருளியலில், நிதியில் அல்லது சமூகவியலில் பட்டம்.

### 2.2 அனுபவம்:

நிலைபெறத்தக்க நிதித் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.

அபேட்சகர்களாக வரக்கூடியவர்கள், ஆங்கிலமொழியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பதுடன் வலுவான பேச்சு மற்றும் எழுத்து, தொடர்பாடல் திறன்களை எடுத்துக்காட்ட வேண்டும் அத்துடன் இப்பதவியானது சாத்தியமாக இரகசியமான மற்றும் உணர்த்திறன்மிக்க தகவல்களைக் கையாளுவதை வேண்டுகின்றது. MS Office packages (Word, Excel, PowerPoint) பயன்படுத்தி பணியாற்றுவதற்கான இயலுமை இப்பதவிக்கான முன்தேவைப்பாடாகும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வெளிப்படுத்தாமை உடன்படிக்கையினை கைச்சாத்திடுமாறு வேண்டப்படுவர்.

**கல்வித் தகைமைகள் மற்றும் பணி அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு கண்டிப்பான ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேற்குறித்த ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படாத ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்பின் ஏதேனும் கட்டத்தில் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

## 3.0 வயது:

2024.02.15 அன்று 40 வருடங்களுக்கு குறைவாகவிருத்தல்

## 4.0 தொழில்:

மூன்று (03) வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையிலானது ஒப்பந்தம் தொடக்கத்தில் ஒரு ஆண்டுக்கு கைச்சாத்திடப்படுவதுடன் செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் மீள்புதுப்பிக்கப்படும்.

## 5.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புகளுடன் ரூ.400,000 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரிவிதிக்கத்தக்க மாதாந்த ஊதியம்

## தேர்வு நடைமுறை

பொருத்தமான அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களை இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2024.02.15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மாத்திரம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “நிலைபெறத்தக்க நிதி கருத்திட்ட அலுவலர் பதவி (ஒப்பந்த அடிப்படை)” பதவிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டார். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற சான்றிதழ் உறுதிப்படுத்தலின் தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் இப்பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்.

ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/ இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. விண்ணப்பங்களை தெரிவட்டவணைப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு பொருந்துகின்றவாறு அபேட்சகர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தில் உள்ளடக்கப்பட்ட விடயப் பரப்புகளின் தொடர்பினை தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தற்றுணிபைக் கொண்டுள்ளது.

தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்பின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

**பணிப்பாளர் - மனிதவளங்கள்**
**இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**
**தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715**